நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை.**திரு.ப.செல்வகுமார், பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருமங்கலம்.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் திங்கட்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.102/2021

**CNR No.TNMD14 - 000405 - 2021**

*****

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,

சிந்துபட்டி காவல் நிலையம்,

குற்ற எண்.968/2020 ...குற்றமுறையிடுபவர்

/எதிரிடை/

ராஜ்மோகன் (வயது 37/2020),

த/பெ.செல்லம்,

டி.உச்சப்பட்டி, உசிலம்பட்டி தாலுகா,

மதுரை மாவட்டம். ... குற்றம் சாட்டப்பட்டவர்

| | | | |
|---|---|---|---|
| 1. | **ஆண்டு பட்டிகை வழக்கு எண்.102/2021** | | |
| 2. | காவல் நிலைய பெயர் & குற்ற எண் | | சிந்துபட்டி காவல் நிலைய குற்ற எண்.968/2020 |
| **குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த விபரம்** | | | |
| 3. | எதிரியின் பெயர் | : | ராஜ்மோகன் |
| 4. | எதிரியின் தந்தை பெயர்/கணவர் பெயர் | : | த/பெ.செல்லம் |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | எதிரியின் முகவரி | : | டி.உச்சப்பட்டி, உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம். |
| 7. | எதிரியின் வயது | : | 37/2020 |
| **தேதி விபரங்கள்** | | | |

| | | | |
|---|---|---|---|
| 8. | சம்பவம் | : | 04.11.2020 |
| 9. | புகார் | : | 05.11.2020 |
| 10. | கைது தேதி | : | 05.11.2020 |
| 11. | பிணை விடுப்பு | : | Bailed by Court |
| 12. | Committal | : | -- |
| 13. | விசாரணை துவக்கம் | : | 03.03.2026 |
| 14. | விசாரணை முடிவு | : | 13.03.2026 |
| 15. | தண்டணை (அ) ஆணை | : | குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. |
| 16. | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிகளுக்கு சார்பு செய்தல் | : | -- |
| 17. | Period of Remand of the accused | : | - |
| 18. | Date of filing of the final report | : | 30.07.2021 |
| 19. | Date of questioning U/s.240, 246 & 251 of Cr.pc | : | 21.09.2021 |
| 20. | Miscellaneous petition and their results | : | U/s.311 CrPc – Allowed<br>U/s.320 Cr.P.C - Dismissed |
| 21. | Date of examination in chief and cross | : | see table below |
| 22. | Date of examination accused U/s.313 Cr.P.C | : | 13.03.2026 |
| 23. | Details of abscondence of accused and his appearance/production | : | Nil |
| 24. | Grant of stay by Superior court and the results thereof | : | Nil |
| 25. | காலதாமதத்திற்கான காரணம்: இல்லை | | |

| PW's | Chief | Cross |
|---|---|---|
| 1. | 03.03.2026 | 03.03.2026 |
| 2. | 03.03.2026 | 03.03.2026 |
| 3. | 09.03.2026 | 09.03.2026 |
| 4. | 09.03.2026 | 09.03.2026 |
| 5. | 12.03.2026 | 12.03.2026 |

இவ்வழக்கானது கடந்த 30.07.2021ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையின் போது, அரசின் சார்பாக கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், சாட்சிகளின் சாட்சியங்களையும், ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

## தீர்ப்புரை

கடந்த 04.11.2020ம் தேதி இரவு 11.30 மணியளவில் வாதி தனது வீட்டில் தனியாக தூங்கி கொண்டு இருந்த போது எதிரி வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து வாதியின் கழுத்தில் இருந்த 4 பவுன் தங்க சங்கிலியை அத்துள்ளதாகவும், உடனே, வாதி சத்தம் போடவும், எதிரி கையால் வாதியின் வாயை பொத்திகொண்டு வாதியின் முகத்தில் ஓங்கி குத்தியதில் வாதிக்கு இடது கண், நெற்றி மற்றும் மூக்கிலும் இரத்தகாயத்தை ஏற்படுத்தியதாகவும், வாதி சத்தம் போடவும் எதிரி வாதியின் கழுத்தில் கிடந்த 4 பவுன் தங்கசெயினை பறித்து சென்று ஓடிவிட்ட குற்றத்திற்காக எதிரி சட்டப்பிரிவுகள் 457, 394 IPCன் படி குற்றம் புரிந்துள்ளதாக சிந்துபட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

02. இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான போது எதிரிக்கு வழக்கு நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 207ன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

03. இவ்வழக்கில் எதிரிக்கு நகல்கள் வழங்கப்பட்ட பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பிறகு குற்றம் பற்றி வினவிய போது எதிரி பொய் வழக்கு என்று மறுத்து கூறினார். இரு தரப்பும் கேட்டும் வழக்காவணங்களை

பரிசீலனை செய்தும் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 457, 394 IPCன் கீழ் குற்றசாட்டுகள் வனைந்து படித்துக்காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்ட போது எதிரி மீண்டும் குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்.

04. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>**

05. கடந்த 04.11.2020ம் தேதி இரவு 11.30 மணியளவில் வாதி தனது வீட்டில் தனியாக தூங்கி கொண்டு இருந்த போது எதிரி வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து வாதியின் கழுத்தில் இருந்த 4 பவுன் தங்க சங்கிலியை அத்துள்ளதாகவும், உடனே, வாதி சத்தம் போடவும், எதிரி கையால் வாதியின் வாயை பொத்திகொண்டு வாதியின் முகத்தில் ஓங்கி குத்தியதில் வாதிக்கு இடது கண், நெற்றி மற்றும் மூக்கிலும் இரத்தகாயத்தை ஏற்படுத்தியதாகவும், வாதி சத்தம் போடவும் எதிரி வாதியின் கழுத்தில் கிடந்த 4 பவுன் தங்கசெயினை பறித்து சென்று ஓடிவிட்டதாக உள்ளது.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

06. இவ்வழக்கின் வாதி சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் மற்றும் புகார் கொடுத்தது பற்றியும் ஒச்சம்மாள் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக புகார் மனு அ.சா.ஆ.1 ஆகவும் மற்றும் சமாதான மனு அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின்

சம்பவம் பற்றி கேள்விபட்டு காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றது பற்றி அழகுராஜா என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையெழுத்து போட்டது பற்றி கருப்பு மற்றும் பாண்டி ஆகியோர்கள் முறையே அ.சா.3 மற்றும் 4 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்களில் அ.சா.3ன் மூலமாக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள அவரது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆகவும், அவர்களில் அ.சா.4ன் மூலமாக ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள அவரது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கினை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட சிந்துபட்டி சார்பு ஆய்வாளர் திரு.மாயன் மற்றும் ஆய்வாளர் திருமதி.சிவசக்தி ஆகியோர்களை தனக்கு நன்கு தெரியும் என்றும் அவரது கையெழுத்து நன்கு தெரியும் என்றும் கூறி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக சிந்துபட்டி காவல் நிலைய தலைமை காவலர் திரு.பெருமாள் என்பவர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.8 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.9 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ.11 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.12 ஆகவும் மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>எதிரியை கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

07. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது அவற்றை எதிரி பொய் சாட்சியம் என்று

கூறியதோடு தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**<u>வாதுரைகள்:–</u>**

08. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பில் எதிரி மீதான வழக்கை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

09. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.வேலுச்சாமி அவர்கள் வாதிடும் போது அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும் வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட வழக்கு என்றும் எதிரியும் அ.சா.1ம் தற்பொழுது சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்து உள்ளதாகவும், இந்த வழக்கின் சம்பவ சாட்சிகள் அனைவரும் தங்களது சாட்சியத்தின் போது அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாகவும் எனவே அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை எந்தவித சந்தேகங்களுக்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

**<u>ஆய்வுக்குரிய பிரச்சனை:–</u>**

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 457, 394 IPCன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>சாட்சிகளின் மதிப்பீட்டல்:-</u>**

11. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தின் பொழுது சுமார் 4, 5 வருடங்கள் இருக்கும் இரவு 11.00 மணிக்கு மேல் தான் மட்டும் தனியாக வீட்டில் இருந்த போது தனது செயினை அறுத்ததாகவும், இரவு நேரம் என்பதால் யார் என்று அடையாளம் தெரியவில்லை என்றும், இது சம்மந்தமாக புகார் கொடுத்ததாகவும், தனது செயினை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுகொண்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் நான் பெற்றுகொண்டதாகும். அது சா.பொ.1 என்றும், எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், அதை நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்ததாகவும், சாட்சியம் அளித்து, அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

12. இவ்வழக்கின் சம்பவத்தை கேள்விபட்ட சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 04.11.2020ம் தேதி இரவு 12.00 மணிக்கு அ.சா.1 தனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன்னை ஒருவர் தாக்கிவிட்டு ஓடிவிட்டதாக சொன்னதாகவும், தான் உடனடியாக சம்பவயிடத்திற்கு வந்து பார்த்ததாகவும், நகையை அறுத்து சென்றுவிட்ட விபரம் தெரிந்தது என்றும், நீதிமன்றத்தில் மனு செய்து அறுத்து சென்ற நகையை பெற்று கொண்டதாகவும், எதிரியை தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

13. இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்த சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் ஒப்புதல்

வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்ததாகவும், தன்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டதாகவும், எதற்காக செய்து கொடுத்தேன் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

14. இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்த மற்றொரு சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், கடந்த 2020ம் வருடம் அ.சா.1 தனக்கு தொலைபேசி மூலம் தொடா்பு கொண்டு எதிரி தன்னை அடித்துவிட்டதாக சொன்னதாகவும், தான் சென்று பார்த்த போது செயினை அறுத்துவிட்டான் என்று சொன்னதாகவும், போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்ததாகவும், தன்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டதாகவும், சாட்சியம் அளித்து அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பொழுதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

15. இவ்வழக்கில் எதிரியும் அ.சா.1ம் சமாதானமாக போய்விட்டதாகக் கூறி சமாதானமனு தாக்கல் செய்துள்ளார்கள்.

16. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 மற்றும் சம்பவ சாட்சியான அ.சா.2 மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்த சாட்சிகளான அ.சா.3 மற்றும் 4 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளை சாட்சியாக விசாரித்தாலும் வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி

ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக சிந்துபட்டி காவல் நிலைய தலைமை காவலர் திரு.பெருமாள் என்பவரை அ.சா.5 ஆக விசாரித்து, அவர் மூலமாக வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து அரசு தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசு தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

17. மேற்கண்டவாறு அரசு தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் 4 வரையுள்ள சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் அவர்கள் எந்த இடத்திலும் எதிரி அ.சா.1ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாகவோ, அ.சா.1க்கு சொந்தமான நகையை திருடியதாகவோ சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டது பற்றி அ.சா.5 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்திருந்தாலும் எதிரியை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்ககூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் இல்லாததால் எதிரி மீதான குற்றச்செயல்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்குவதே நீதியின் பால் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

18. முடிவாக, அரசு தரப்பு வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்கி எதிரியை இ.த.ச. 457, 394 IPCன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

19. இவ்வழக்கில் RPR.No.152/2020ல் கைப்பற்றபட்ட வழக்கு சொத்தான சுமார் 4 பவுன் எடையுள்ள தங்க செயின்–1 அதன் உரிமையாளரான புகார்தாரருக்கு இந்நீதிமன்ற Cr.M.P.No.2068/2020 dated: 23.12.2020ன் படி கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தை அவரே வைத்து கொள்ளவும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் பிணைமுறி ஆவணத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**<u>1. அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

அ.சா.1. ஒச்சம்மாள்

அ.சா.2. அழகுராஜா

அ.சா.3. கருப்பு

அ.சா.4. பாண்டி

அ.சா.5. பெருமாள், தலைமை காவலர்.

**<u>2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

அ.சா.ஆ.1. புகார் மனு

அ.சா.ஆ.2. பார்வை மகசர்

அ.சா.ஆ.3. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3ன் கையொப்பம்

அ.சா.ஆ.4. அத்தாட்சியில் உள்ள அ.சா.3ன் கையொப்பம்

அ.சா.ஆ.5. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4ன் கையொப்பம்

அ.சா.ஆ.6. அத்தாட்சியில் உள்ள அ.சா.4ன் கையொப்பம்

அ.சா.ஆ.7. முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.8. பார்வை மகசர்

அ.சா.ஆ.9. மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.10. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.11. அத்தாட்சி

அ.சா.ஆ.12. படிவம் 91

அ.சா.ஆ.13. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**3. சான்று பொருள்:–** தங்கசெயின் உள்ள புகைப்படம் (எண்ணிக்கை –1)

**4. எதிரி தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**குறிப்பு:–** 1) விசாரணையின் போது எதிரி பிணையிலிருந்தார்.

2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:–** மாண்புமிகு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

SELVAKUMAR Digitally signed by SELVAKUMAR
Date: 2026.03.16 16:07:38 +0530

நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.